Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com R.DIS No: 60/2021 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact : 98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 05, 2021 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 53

## ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக நாளை அனைத்துக்கட்சி கூட்டம் - தேர்தல் ஆணையம்



சென்னை, செப் 05 2021: தமிழ்நாட்டில் புதிதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, தென்காசி, ராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், வேலூர், திருநெல்வேலி, காஞ்சிபுரம் ஆகிய 9 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சி தேர்தலை நடத்த மாநில தேர்தல் ஆணையம் தீவிர ஏற்பாடுகளை செய்து வந்தது.

இதற்காக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கும் நடவடிக்கையையும் தொடங்கி உள்ளது. ஊரக உள்ளாட்சி தேர்தலுக்கான அறிவிப்பு வருகிற 13-ந்தேதி வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் மாநில தேர்தல் ஆணையம் சார்பில் சுப்ரீம்கோர்ட்டில் திடீரென ஒரு மனுதாக்கல் செய்யப்பட்டது. அதில், "தமிழகத்தில் நகர்புற உள்ளாட்சி தேர்தல் மற்றும் 9 புதிய மாவட்டங்களுக்கான உள்ளாட்சி தேர்தலை நடத்த மாநில தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்து வந்தாலும் இவற்றை சுப்ரீம் கோர்ட்டு விதித்த கால கெடுவுக்குள் நடத்தி முடிக்க சாத்தியமில்லாத சூழல் உருவாகி உள்ளது. எனவே தேர்தல் நடத்த மேலும் காலஅவகாசம் தேவை" என்று அதில் கூறப்பட்டு உள்ளது. இந்த மனு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக நாளை அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

சென்னை, அரும்பாக்கத்தில் உள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய அலுவலகத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெறும் என்றும் உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக ஆலோசிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "ஹலோ மிரர் மெட்ராஸ் நாளிதழ் செய்தி எதிரொலி"

## பஞ்சம்தாங்கி மலை காட்டு தீ வனத்துறை ரேஞ்சர் ஆறுமுகம் தலைமையில் கட்டுப்படுத்தப்பட்டது





வருஷநாடு, செப்டம்பர் 05 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு பகுதி பஞ்சம்தாங்கி மலையில் கடந்த ஒரு மாதத்தில் 4 முறை காட்டு தீ பற்றி எரிந்தது. இதனை கட்டுப்படுத்த வனத்துறையினர் பலமுறை முயற்சி செய்தும் அடுத்தடுத்து தொடர்ந்து காட்டு தீபற்றி எரிந்ததால் வருஷநாடு பகுதி மக்கள் மிகுந்த அச்சத்திலும் பீதியிலும் உறைந்து இருந்தனர். இச்செய்தி ஹலோ மிஸ்டர் மெட்ராஸ் நாளிதழில் செய்தியாக வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து கண்டமனூர் ரேஞ்சர் ஆறுமுகம் தலைமையிலான வனக் காப்பாளர்கள் வன உதவியாளர்கள் அனைவரும் குழுவாக சென்று முகாமிட்டு பற்றி எரிந்த காட்டுத் தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். இதனால் மரங்களும் வன விலங்குகளும் பாதுகாக்கப்பட்டன. தீயை கட்டுப்படுத்த உயிரை துச்சமென கருதி வனத்தை காத்த அந்த மாவீரர்களுக்கு இப்பகுதி மக்கள் நன்றியை தெரிவித்தனர். மேலும் மலைப்பகுதியில் தீ பரவுவதற்கான காரணங்களை கண்டறிந்து வனத்தை அழிக்க முயற்சி சம்பந்தப்பட்ட சமூக விரோதிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். என வனத்துறையினருக்கு பொதுமக்கள் வேண்டுகோள் வைக்கின்றனர்.

## தமிழகத்தில் உள்ள நெடுஞ்சாலைகளில் உள்ள காலாவதியான டோல் கேட்டுகளை அகற்ற தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் விக்கிரமராஜா கோரிக்கை



மதுரை, செப்டம்பர் 05 2021: தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சங்கக் கூட்டத்தில் மாநிலத் தலைவர் விக்கிரம ராஜா , மற்றும் அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் சங்கக் கூட்டம் மதுரையில் உள்ள ஒரு தனியார் ஹோட்டலில் நடைபெற்றது. கூட்டத்தில் மதுரை திண்டுக்கல் நெல்லை தூத்துக்குடி மாவட்ட மண்டல வாரியாக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாநிலத் தலைவர் விக்ரம ராஜா தலைமை தாங்கினார், மாநில பொதுச் செயலாளர் கோவிந்தராஜ், மாநில பொருளாளர் சதக்கத்துல்லா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழகம் முழுவதும் வணிகர்களுக்கு மண்டல வாரியாக குறைகளை தீர்க்க கூட்டம் நடத்தப்படுகிறது. தமிழக சட்டமன்ற கூட்டம் முடிந்த பின்னர் தமிழக முதலமைச்சர் தங்களுடைய குறைகளை தீர்க்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் சென்னையில் உள்ள டோல்கேட்டுகளை அகற்றியதை போல மதுரை உள்ளிட்ட பல்வேறு மாநகரங்களில் உள்ள டோல்கேட்டுகளை அகற்ற தமிழக முதல்வர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் உள்ள நெடுஞ்சாலைகளில் உள்ள காலாவதியான டோல் கேட்டுகளை அகற்ற தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். என்று தமிழக வணிகர் சங்க பேரமைப்பு வலியுறுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு செக்கிழுத்த செம்மல் வ உ சி சிதம்பரம் அவர்களின் 150-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மணிமண்டபம் கட்ட உள்ளதை நாங்கள் வரவேற்கிறோம். வணிகர்களின் உறுப்பினர் சேர்க்கை வருகின்ற செப்டம்பர் 15 தேதியுடன் முடிவடைகிறது. அதனை டிசம்பர் வரை நீடிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழகத்தில் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் குற்றாலம் ஒகேனக்கல் போன்ற நீர்வீழ்ச்சிகளில் குளிப்பதற்கும் அனுமதி வழங்க வேண்டும் . மேலும் சுற்றுலா தலங்களில் உள்ள கடைகளை திறக்க உரிய அனுமதி வழங்க வேண்டும் .குறிப்பாக கொடைக்கானல், ஊட்டி , வால்பாறை, உள்ளிட்ட சுற்றுலா தலங்களிலும் வணிகர்கள் கடைகளை திறப்பதற்கு எந்த ஒரு தடையின்றி கடைகள் திறக்க அனுமதி வழங்க வேண்டும், தமிழக அரசு செப்டம்பர் சேவை கட்டணம் ரூபாய் 500 இல்லாமல் வணிகர்கள் நல வாரிய உறுப்பினர்களாக

சேர அனுமதிக்கின்றது. கொரனா காலம் கருதி இந்த கால வரம்பை டிசம்பர் 31 வரை நீட்டித்து அரசு உத்தரவிட வேண்டும்.

கூட்டத்தில் 12 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதன்பின் விக்கிரம ராஜா செய்தியாளர்களை சந்தித்தார்.

மதுரை மாநாராட்சி எல்லைக்குள் உள்ள சுங்கச்சாவடிகளையும் இதர மாவட்ட நகராட்சி எல்லைக்குள் உள்ள சுங்க சாவடிகளையும் நீக்கிட அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளோம்.

வணிகர் சங்கங்கத்தின் .எங்களது கோரிக்கைகளை தமிழக முதல்வர் மு,க, ஸ்டாலின் நேரில் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

சுங்க சாவடிகட்டணம் பெட்ரோல் டீசல் விலை உயர்வு குறித்து சென்னையில் ஆலோசனை கூட்டம் நடத்தி போராட்டம் நடத்துவதற்கான தேதி குறிப்பிடப்படும்.

திமுக அரசின் பட்ஜெட் நியாயமான பட் ஜெட் தற்போது மத்தியில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி பொதுத்துறை நிறுவனங்களை குத்தகைக்கு விடுவது கடந்த காங்கிரஸ் ஆட்சியிலும் இதுபோன்ற செயல் நடைபெற்றது. அதேபோல் பிஜேபி அரசு பொதுத்துறை நிறுவனங்களை குத்தகைக்கு விடப்படுகின்றன.

பல்வேறு தளர்வுகளுடன் அனைத்து தொழில்களும் இயக்குவதற்கு அரசு அனுமதியளித்துள்ள நிலையில் சுற்றுலாத்தலங்கள் குறிப்பாக குற்றாலம், ஒகேனக்கல், வால்பாறை போன்ற நீர்வீழ்ச்சி நிலைகள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்க வேண்டும்.

தமிழ்நாடு வணிகர் சங்க மாநில செயலாளர் விக்கிரமராஜா தெரிவித்தார்.

## அடிப்படை கட்டமைப்புக்காக ஒரு செங்கல்லைக் கூடமோடி அரசு எடுத்து வைக்கவில்லை 'என்எம்பி' எனப்படும் 'தேசிய பணமாக்கல் வழி' குறித்த வரைவுத் திட்டம் ஏதும் இல்லை - கே.எஸ். அழகிரி



சென்னை, செப்டம்பர் 05 2021: கடந்த 67 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட தேசத்தின் சொத்துகள் விற்கப்படுகின்றன. இதன்மூலம், கடந்த 70 ஆண்டுகளாக காங்கிரஸ் (அடல் பிஹாரி வாஜ்பாய் அரசு உட்பட மற்ற அரசுகளும் சேர்த்து) எதையும் செய்யவோ, கட்டமைக்கவோ இல்லை என்று 7 ஆண்டுகளாக நரேந்திர மோடியும் அவரது அமைச்சர்களும் சுமத்தி வந்த குற்றச்சாட்டு, பொய் என தற்போது நிரூபணமாகியுள்ளது. நீண்ட காலமாக இழப்பு ஏற்படும் பொதுத் துறை நிறுவனங்களை மட்டுமே காங்கிரஸ் விற்பனை செய்தது. பாதுகாப்பு, ரயில்வே போன்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த துறைகளை விற்பதற்குக் காங்கிரஸ் ஒருபோதும் முயன்றதில்லை. இந்த துறைகளைத் தனியார் ஏகபோகத்துக்கு விட்டால் அது நாட்டின் வளர்ச்சிக்கு ஆபத்தை ஏற்படுத்தும். பணமதிப்பிழப்பு மற்றும் தனியார்மயமாக்கல் ஆகியவற்றுடன், 'பணமாக்குதல்; என்ற எண்ணம் மோடி அரசுக்கு உருவாகியுள்ளது. கடந்த 67 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட பொதுச் சொத்துகளை, ஒரு சில நண்பர்களுக்குத் தாரை வார்க்க மோடி அரசு விரும்புகிறது. விற்கப்படும் சொத்துகள் 30 முதல் 50 ஆண்டுகள் கழித்தே அரசுக்குத் திரும்பி வரும். அப்போது அந்த சொத்துகள் மதிப்பிழந்து பூஜ்ஜியமாகிவிடும்.

ஏதாவது ஒரு பெயரைச் சொல்லி 'வாடகை' வசூலிக்கலாம் என்று அரசு நினைக்கிறது. எந்த பெயரை வைத்தாலும், தேசிய கட்டமைப்புக்கான முதலீடாக அது இருக்க வேண்டும். ரூ. 1.5 லட்சம் கோடி நிதியைத் திரட்ட, 70 ஆண்டுகளாக உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களைத் தான் விற்க வேண்டுமா? நாட்டின் அடிப்படை உள்கட்டமைப்புக்காக ரூ. 100 லட்சம் கோடி ஒதுக்கப்படும் என 3 முறை பிரதமர் மோடி அறிவித்தார். மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் சொல்வதைப் போல், பொதுத்துறை நிறுவனங்களை விற்று 4 ஆண்டுகளில் 6 லட்சம் கோடி ரூபாயை வசூலிப்பதாகவே வைத்துக் கொண்டால், நீங்கள் கூறும் ரூ.100 லட்சம் கோடிக்கான அடிப்படை உள்கட்டமைப்பை இந்த வருவாயிலிருந்து எப்படிச் செலவிட முடியும்?.

அடிப்படை கட்டமைப்புக்காக ஒரு செங்கல்லைக் கூட மோடி அரசு எடுத்து வைக்கவில்லை. வாடகை என்ற பெயரில் இவர்கள் வசூலிக்கப்போவது நடப்பு செலவினங்களைச் சமாளிப்பதற்குத்தான். அதில் மீதம் இருந்தால், புல்லட் ரயில் திட்டம், சென்ட்ரல் விஸ்டா, புதிய நாடாளுமன்ற கட்டிடம், பிரதமருக்கு புதிய விமானம் வாங்கச் செலவிடப்படும். இந்த கையாலாகாத அரசு, பொதுத் துறை நிறுவனங்களின் சொத்துகளை யாருக்கு வழங்கும் என்று நமக்குத் தெரியும். இந்த நிறுவனங்களை ஏலம் எடுப்பவர்களுக்கு பொதுத்துறை வங்கிகள் நிதியுதவி அளிக்கும்.

எனவே, பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துகளைத் தனியார் கையகப்படுத்துவதற்கு, பொதுத்துறை வங்கிகளின் பணமே பயன்படுத்தப்படும். முதலாவதாக, 30 முதல் 50 ஆண்டு காலத்துக்கு பொதுத்துறை நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்த்தால், இந்த தேசத்துக்கோ அல்லது எதிர்கால சந்ததியினருக்கோ எந்த பலனும் கிடைக்காது. தேசத்துக்கு வரவேண்டிய வருவாய் முற்றிலும் நின்றுபோகும். இரண்டாவதாக, தனியார் வசம் செல்லும் பொதுத் துறை நிறுவனங்களில் ஏழைகள், எஸ்.சி., எஸ்டி., ஓபிசி போன்றோருக்கு வேலை வாய்ப்புகள் பறிபோகும்.

ரூ. 1.6 லட்சம் கோடி மதிப்புள்ள 26,700 கி.மீ தொலைவுக்கான தேசிய நெடுஞ்சாலை, ரூ.1.5 லட்சம் கோடி மதிப்புள்ள 400 ரயில் நிலையங்கள், 150 தனியார் ரயில்கள், ரயில் பாதை மற்றும் சேமிப்புக் கிடங்குகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளன. அதோடு, 42,300 சர்க்யூட் கி.மீ தொலைவுக்கான மின் பாதை, 6 ஆயிரம் மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி, என்ஹெச்பிசி, என்டிபிசி மற்றும் என்எல்சி ஆகியவற்றுக்குச் சொந்தமான சோலார் காற்றாலை சொத்துகளும், கெயில் நிறுவனத்தின் 8 ஆயிரம் கி.மீ தொலைவுக்கான தேசிய கேஸ் பைப்லைனும் தற்போது தனியார் மயமாக்கப்படவுள்ளன. மேலும், 4 ஆயிரம் கி.மீ. தொலைவுக்கான பெட்ரோலிய பைப்லைன்களும், பாரத் நெட் ஃபைபர் நெட்வொர்க், பிஎஸ்என்எல் மற்றும் எம்டிஎன்எல் டவர்கள் போன்ற 2.8 லட்சம் கி.மீ தொலைவுக்கான தொலைத்தொடர்பு சொத்துகளும், 210 லட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட ரூ.29 ஆயிரம் கோடி மதிப்புள்ள சேமிப்புக் கிடங்குகள், 107 நிலக்கரி சுரங்கங்கள், 761 கனிம வள மண்டலங்கள், ரூ.21 ஆயிரம் கோடி மதிப்புள்ள 25 விமான நிலையங்கள், செயல்படுத்தப்பட்டு வரும் 31 திட்டங்களுடன் சேர்த்து ரூ.13 ஆயிரம் கோடி மதிப்புள்ள துறைமுகங்கள், ரூ.11 ஆயிரம் கோடி மதிப்புள்ள 2 தேசிய ஸ்டேடியங்கள் ஆகியவற்றை சில தொழிலதிபர்களுக்கு பரிசாகக் கொடுக்க முடிவு செய்துள்ளது நாட்டு மக்களுக்குச் செய்யும் பச்சைத் துரோகம்.

'என்எம்பி' எனப்படும் 'தேசிய பணமாக்கல் வழி' குறித்த வரைவுத் திட்டம் ஏதும் இல்லை. விற்கப்படும் பொதுத் துறை நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் மற்றும் தொழிற்சங்கங்களுடன் ஆலோசனை நடத்தப்படவில்லை. நாடாளுமன்றத்திலும் விவாதிக்கப்படவில்லை. முறைசாரா துறையை ஒழிக்க இந்திய பிரதமர் பல்வேறு வழிகளைக் கையாண்டு கொண்டிருக்கிறார். நாட்டில் ஏகபோகங்களை உருவாக்குவது ஆபத்தானது. இதைத் தான் நாம் கிழக்கிந்திய கம்பெனியிடம் பார்த்தோம். ஏகபோகம் மூலம் தான் அவர்கள் நம்மை அடிமைப்படுத்தினார்கள். இப்போதும் அதேபோன்ற அடிமைத் தனத்துக்கு மோடி அரசு அழைத்துச் சென்று கொண்டிருப்பது தேசத்துக்கு எதிரான நடவடிக்கையே. மீண்டும் ஒரு சுதந்திரப் போராட்டத்துக்குத் தயாராக வேண்டிய நேரம் நெருங்கிவிட்டது. நாட்டின் சொத்துகளை விற்பதைத் தடுக்க அனைத்துக் கட்சிகளும், மக்களும் ஓரணியில் திரள வேண்டும். இவ்வாறு கே.எஸ். அழகிரி கூறினார்.

## மதுபான கடைகளை திறக்கும் தமிழக அரசு விநாயகர் சதுர்த்திக்கு தடை விதிப்பது ஏன்? முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சி.வி சண்முகம் கேள்வி



திண்டிவனம், செப். 05 2021: விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அடுத்த மயிலத்தில் நடந்த உள்ளாட்சி தேர்தல் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சி வி சண்முகம் பேசினார்.

அரசியல் உள்நோக்கத்தோடு விநாயகர் சதுர்த்தியை திமுக அரசு தடுத்து நிறுத்துகிறது - திண்டிவனத்தில் முன்னால் சட்டத்துறை அமைச்சர் சி.வி சண்முகம் பேச்சு. திண்டிவனம் அடுத்த மயிலத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அதிமுகவின் உள்ளாட்சி தேர்தல் குறித்த ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசிய முன்னாள் சட்டத்துறை அமைச்சர் சிவி சண்முகம், நீண்ட காலமாக மக்களால் சிறப்பாக நடத்தி வரப்பட்ட விநாயகர் சதுர்த்தி நிகழ்ச்சியை திமுக அரசு அரசியல் உள்நோக்கத்தோடு தடுக்க நினைக்கிறது என்று கூறினார். மேலும், கூட்டம் அதிகம் கூடுகின்ற அரசு மதுபான கடையை திறந்து வைக்கும் திமுக அரசு விநாயகர் சதுர்த்தியை மட்டும் தடுத்து நிறுத்துவது ஏன்? என்று கேள்வி எழுப்பினார். முன்னதாக தீவனூர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய அவர், அம்மா ஆட்சியில் கொண்டுவரப்பட்ட தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் மற்றும் பெண்களுக்கு இருசக்கர வாகனம் வழங்கும் திட்டம் ஆகியவற்றை இந்த அரசு நடைமுறைப்படுத்துவதை நிறுத்தி வைத்துள்ளது என்றும் கூறினார். மேலும் வருகின்ற உள்ளாட்சி மன்ற தேர்தலில் அதிமுக அதிக இடங்களில் வெற்றி பெற்று மக்கள் பணியாற்ற நமது கட்சியினர் ஒற்றுமையாக பாடுபட்டு உள்ளாட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



## பெரியகுளம் தென்கரையில் ஆறு மாதங்களாக பயனற்ற நிலையில் உள்ள நகராட்சி கழிப்பிடம் தூய்மை படுத்த பொதுமக்கள் கோரிக்கை



பெரியகுளம்,செப்டம்பர் 05 2021: பெரியகுளம் தென்கரை கச்சேரி ரோட்டில் உள்ள அரசு மருத்துவமனையும் கால்நடை மருத்துவமனையும் இடையில் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள கழிப்பிடம் உள்ளது. ஆறு மாதங்களாக பயனற்ற நிலையில் உள்ளது. மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. கழிப்பிடம் அருகில் புல்பூண்டு நிறைந்து காணப்படுகிறது. எனவே அரசு மருத்துவமனைக்கு வரும் பொதுமக்களும் கால்நடை மருத்துவமனைக்கு வரும் பொதுமக்களும் சிறுநீர் கழிக்கவோ கழிப்பிடம் செல்லவோ மிகவும் சிரமப்படுகின்றனர். அரசு மருத்துவமனை எதிரில் குறைந்த பட்சம் 12 தேநீர் கடைகளும் உள்ளன. அங்கு பணிசெய்யும் மக்கள் கண்ணீர் விடுகின்றனர் பத்திர அலுவலகம் அங்கு உள்ளது. ஒருநாளைக்கு 200 க்கு மேற்பட்டோர் ஆண்கள், பெண்கள் வருகின்றனர் ஆகையால் பொதுமக்கள் இவ்விடம் சுத்தம் செய்து மீண்டும் நன்கு முறையில் தூய்மை படுத்தி பொதுமக்களுக்கு பயன்படுத்தும் வகையில் நகராட்சி நிர்வாகத்திடம் பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர்.



**நாகர்கோவில்: குமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே புத்தேரி குளம் என்ற குளம் உள்ளது. குளமானது சுமார் 500 ஆண்டுகளாக பல விவசாயிகளுக்கு உபயோகப் பட்டு வந்துள்ளது ஆனால் இப்பொழுது நிர்வாக சீர்கேட்டின் காரணமாக தூர் வாராமல் மனித கழிவு வீட்டில் உபயோகப்படுத்தப்பட்டு வரும் நிலையில் துர்நாற்றம் வீசுகிறது. இதனை பொதுமக்கள் கண்டு முகம் சுளிக்கும் அளவுக்கு உள்ளது. ஆகையால் நிர்வாகம் தலையிட்டு உடனே குளத்தை தூர்வாரி சரி செய்ய வேண்டும் என்று பொது மக்களும் சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.**

DTP & DESIGN
8144337349

## வருசநாடு அருகே கஞ்சா விற்பனை செய்த ஒருவர் கைது



**வருஷநாடு, செப்டம்பர் 05 2021: கடமலை மயிலை ஒன்றியம் வருஷநாடு காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட தும்மக்குண்டு ஊராட்சி வாலிபரை கிராமத்திற்கு வருஷநாடு காவல்துறை சார்பு ஆய்வாளர் அருண் பாண்டியன் தலைமையில் காவலர்கள் ரவிவர்மா மலைச்சாமி சவுந்தரபாண்டி தனிப்பிரிவு காவலர் ரஞ்சித் ஆகியோர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது தும்மக்குண்டு அருகே உள்ள வாலி பாறை கிராமத்தைச் சேர்ந்த குபேந்திரன் வயது 52 என்பவர் கஞ்சா விற்பனை செய்தது தெரியவந்தது. அவரிடமிருந்து 1.500 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்து வருஷநாடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தனர்.**

## கிணற்றில் தவறி விழுந்த நாயை உயிருடன் மீட்ட கடமலைக்குண்டு தீயணைப்புத் துறையினருக்கு பொதுமக்கள் பாராட்டு

வருஷநாடு, செப்டம்பர் 05 2021: கடமலை மயிலை ஒன்றியம் பாலூத்து விளக்கு அருகே தனியாருக்கு சொந்தமான மொட்டை கிணறு எவ்வித பராமரிப்பும் இன்றி தேனி கடமலை செல்லும் சாலைஅருகே ஆபத்தை விளைவிக்கும் வகையில் பயன்பாடற்ற முறையில் உள்ள கிணற்றில் தவறி விழுந்த நாயை கடமலைக்குண்டு தீயணைப்பு துறையினர் உயிருடன் மீட்டனர். இப்பகுதி மக்கள் தீயணைப்புத் துறையினரை வெகுவாக பாராட்டினார். கண்டமனூர் கணேசபுரத்தில் ஒருவர் கிணற்றில் சடலமாக கிடப்பதை அறிந்து விரைந்து செயல்பட்டு சடலத்தை கைப்பற்றியது கடமலைக்குண்டு தீயணைப்புத்துறையினர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பயன்பாடற்ற முறையில் ஆபத்தை விளைவிக்கும் வகையில் இருக்கின்ற மொட்டை கிணறு மூட ஊராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். என சமூக ஆர்வலர்கள் கூறி வருகின்றனர்.

## விக்கிரவாண்டியில் பா.ம.க., உள்ளாட்சி தேர்தல் ஆலோசனை கூட்டம்



விக்கிரவாண்டி, செப்.05.2021: விக்கிரவாண்டி ஒருங்கிணைந்த ஒன்றிய பா.ம.க., உள்ளாட்சி தேர்தல் ஆலோசனை கூட்டம் நடந்தது.

விக்கிரவாண்டி அடுத்த பனையபுரத்தில் தனியார் திருமண மண்டபத்தில் நடந்த ஆலோசனை கூட்டத்திற்கு மத்திய மாவட்ட செயலாளர் புகழேந்தி

தலைமை தாங்கினார் . ஒன்றிய செயலாளர்கள் சக்திவேல், சம்பத், கார்த்திகேயன், ஏழுமலை, வேல்முருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

தொகுதி செயலாளர் சீனுவாசன் வரவேற்றார் .

உள்ளாட்சி தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவது குறித்து மாநில துணை பொதுச் செயலாளர் தங்கஜோதி, மாநில துணை அமைப்பு செயலாளர்

பழனிவேல், மாவட்ட வன்னியர் சங்க செயலாளர் புண்ணியக்கோடி, மாநில சமூக ஊடகபேரவை செயலாளர் சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோர் பேசினர்

கூட்டத்தில் வன்னியர்களுக்கு 10.5 சதவிகிதம் இடஒதுக்கீடு பெற்று தந்த டாக்டர் ராமதாஸ், டாக்டர் அன்புமணி ராமதாஸ்,மாநில தலைவர் மணி

ஆகியோருக்கும் சட்டமுன் வடிவு செய்த முன்னாள் அமைச்சர் சண்முகம், சட்டமாக நிறைவேற்றி அரசிதழில் வெளியிட்ட முன்னாள் முதல்வர்

எடப்பாடி பழனிசாமி,முன்னாள் துணை முதல்வர் பன்னீர் செல்வம், நடைமுறை படுத்திய தமிழக முதல்வர் ஸ்டாலின் ஆகியோருக்கு

நன்றியையும்,இடஒதுக்கீட்டு போராளிகளுக்கு மணி மண்டபம் அறிவித்த தமிழக முதல்வர் ஸ்டாலினுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

உள்ளாட்சி தேர்தலில் டாக்டர் ராமதாஸ் ஆணை படி அனைத்து பதவிகளுக்கும் போட்டியிட்டு வெற்றி பெறுவது என்பது உள்ளிட்ட பல்வேறு

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட நிர்வாகிகள் கிருஷ்ணமூர்த்தி, செந்தில்குமார்,ரமேஷ்,அறிவேரான் யேசு, செல்வகுமார், வெற்றிவேல், மதியழகன், சுபாஷ், வீரவேல் உட்பட பலர்

கலந்து கொண்டனர் . பசுமை தாயக மாவட்ட செயலாளர் தீனவேலு நன்றி கூறினார் .

விக்கிரவாண்டி ஒருங்கிணைந்த ஒன்றிய பா.ம.க., ஆலோசனை கூட்டத்தில் மாவட்ட செயலாளர் புகழேந்தி பேசினார் .



**கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஓசூர் மாநகராட்சி எல்லை விரிவாக்கம் குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் வி ஜெயச்சந்திர பானு ரெட்டி தலைமையில் நடைபெற்றது உடன் ஓசூர் மாநகராட்சி ஆணையாளர் எம் செந்தில்முருகன் மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் பொது பி முருகன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.**

## கடமலை மயிலை ஒன்றியத்தில் சமையல் சிலிண்டர் விநியோகத்திற்கு அதிக கட்டணம்



வருஷநாடு, செப்டம்பர் 05 2021: ஆண்டிபட்டி தாலுகா கடமலை மயிலை ஒன்றியத்தில் தனியார் நிறுவனம் சிலிண்டர் விநியோகம் செய்து வருகின்றது. கடமலைக்குண்டு மையப்படுத்தி ஒன்றியத்தில் பல பகுதிகள் மற்றும் அனைத்து கிராமங்களுக்கும் சமையல் சிலிண்டர் சப்ளை செய்யப்படுகிறது. இதற்கு டெலிவரி பாய் அரசு நிர்ணயித்த விலையை விட அதிகமாக சிலிண்டர் ஒன்றுக்கு ரூபாய் 50 வரை அதிகமாக பெறப்படுவதாக, இப்பகுதி பெண்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். தற்போது அரசு சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை அதிகரித்துக் கொண்டே போவதால் வருமானத்தை கணக்கிட்டு பார்க்கும் பொழுது மிக சிரமமாக இருப்பதாகவும் மேலும் இவர்களை ரூபாய் 50 கேட்கும்பொழுது மிகவும் சிரமப்படுவதாக கூறுகின்றனர்.

இது விஷயமாக சமூக ஆர்வலர்கள் சிலர் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் கேட்டபோது நேரடியாக குடோனில் வந்து நேரடியாக பெற்றுக் கொண்டாள் மட்டும் அதிகமாக ரூபாய் இருபது கொடுத்துவிட்டு சிலிண்டரை பெற்றுக்கொள்ளலாம். என்றும் தங்கள் பகுதிக்கு நேரடியாக கொண்டு வரும்பொழுது வாகன வாடகை ஓட்டுநர் மற்றும் உதவியாளர்கள் அனைவருக்கும் சம்பளம் வினியோகம் செய்யப்படும். சிலிண்டரில் இருந்து வாங்குகின்ற 50 ரூபாயில் தான் கொடுக்க முடியும் எனவும் கூறி வருவதாக கூறுகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட மாவட்ட நிர்வாகம் அரசு நிர்ணயித்துள்ள விலையை மட்டும் பெற மேற்கண்ட தனியார் நிறுவனத்துக்கு உத்தரவிட வேண்டும். என பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் இல்லத்தரசிகளும் கேட்டுக் கொள்கின்றனர்.

## ரேஷன் கார்டில் குழப்பம் உரிய பயனாளிகள் தவிப்பு




வருஷநாடு, செப்டம்பர் 05 2021: ஆண்டிபட்டி தாலுகா கடமலை மயிலை ஒன்றியத்திற்குட்பட்ட 18 ஊராட்சிகளில் 300-க்கும் மேற்பட்ட கிராமம் மற்றும் மலை கிராமம் உள்ளது. இதில் பெரும்பாலும் விவசாயம் மற்றும் விவசாய கூலி வேலையை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் ரேஷன் கடைகளில் தமிழக அரசு வழங்கும் ரேஷன் பொருட்களை நம்பி வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில் ஸ்மார்ட் கார்டு என்கின்ற ரேஷன் கார்டில் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு தரத்திற்கு ஏற்றார்போல் ரேஷன் பொருட்கள் வழங்கப்படுகிறது. இதில் பெரும்பாலும் வசதி படைத்தவர்களுக்கு 35 கிலோ அரிசி வீதமும் அதற்குரிய இலவச பொருட்களும் வழங்கப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் 12 கிலோ அரிசி மட்டும் பெற வேண்டிய சூழ்நிலையில் உள்ளது. எனவே கூலி வேலை செய்து ரேஷனில் வழங்கப்படும். பொருட்களை நம்பி தனது குடும்பத்தை நடத்தி வரும் பொதுமக்களின் நலன் கருதி மாவட்ட ஆட்சியர் மற்றும் ஆண்டிபட்டி வட்டாட்சியர் ஸ்மார்ட் கார்டு என்ற ரேஷன் கார்டு மறு ஆய்வுக்கு உட்படுத்தி அனைத்து பகுதிகளில் முகாம் அமைத்து உரிய பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் சலுகையின் அடிப்படையில் பொருட்கள் வழங்க வேண்டும். என பாதிக்கப்பட்ட மக்களும் பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கேட்டுக் கொள்கின்றனர். இதனால் ரேஷன் கடை பணியாளர்களுக்கும் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு வாக்குவாதம் ஏற்படுகின்ற நிலையும் உள்ளது. எனவே அனைத்து ஸ்மார்ட் கார்டுகளையும் மறு ஆய்வுக்கு உட்படுத்தி இப்பகுதியில் சிறப்பு முகாம் வேண்டும். என கேட்டுக் கொள்கின்றனர்.

## கிருஷ்ணகிரியில் தேசிய மாணவர் படை சார்பில் 100 மேற்பட்ட கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ-மாணவியர் ஓட்டம் மற்றும் உடற்பயிற்சி



கிருஷ்ணகிரி, செப்டம்பர் 05 2021: கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 75 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி நடைபெற்ற வலிமையான இந்தியா ஓட்டத்தில் சேலம் யூனிட் 2 தமிழ்நாடு சிக்னல் கம்பெனி தேசிய மாணவர் படை சார்பில் 100க்கும் மேற்பட்ட கல்லூரி தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர். இந்த ஓட்டத்தின் மூலம் பொதுமக்கள் உடற்பயிற்சி மற்றும் யோகா பயிற்சிகளை தினமும் செய்து தங்கள் உடலை பாதுகாத்துக் கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் சேரலாதன் தலைமை தாங்கினார் ஜெசிஐ காவேரிப்பட்டினம் சங்கத்தின் தலைவர் சிவகுமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் பள்ளியின் உதவி ஆசிரியர்கள் ராஜேஸ்வரி பத்மாவதி ரமேஷ் பாபு முன்னிலை வகித்தனர் வலிமையான இந்தியா ஓட்டத்தினை காவல் துணை கண்காணிப்பாளர் சரவணன் மற்றும் கிருஷ்ணகிரி நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் கபிலன் கொடியசைத்து துவக்கி வைத்தனர். வலிமையான இந்திய ஓட்டம் நிகழ்ச்சி கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இருந்து தொடங்கி காந்தி ரோடு, பழையபேட்டை டிபி ரோடு, வழியாக புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை, வரை சென்று பெங்களூர் ரோடு வழியாக மாவட்ட முதன்மை கல்வி அலுவலக வளாகத்தில் முடிவுற்றது .ஒட்டப்பந்தய நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மகேஸ்வரி சான்றிதழ் வழங்கி வாழ்த்துரை வழங்கினார். இந்த வலிமையான இந்தியா தொடர் ஓட்ட நிகழ்ச்சியில் பெருமாள் மணிமேகலை கல்லூரி ஓசூர், சோனா கல்லூரி விநாயகா மிஷன்ஸ் கல்லூரி சேலம், ஸ்ரீ சக்தி கைலாஷ் மகளிர் கல்லூரி சேலம், பத்மாவதி மகளிர் கல்லூரி சேலம், மற்றும் ராணுவ பயிற்சி அதிகாரிகள் சியாராம் யாதவ் ஜெசிஓ' பாஸ்கரன் ஜெசிஓ, ரங்கன் அவில்தார், வினோத் பாய், திவாரி மற்றும் என்.சி.சி அதிகாரிகள் லெப்டினன்ட் எஸ். சண்முகம் ,ஃபர்ஸ்ட் ஆபீஸர் சகாதேவன் "ஃபர்ஸ்ட் ஆபீஸர் கோபு "கேர் டேக்கர் தீபா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம், நாகரசம்பட்டி 'பாரூர் 'பள்ளிகளைச் சேர்ந்த தேசிய மாணவர் படை ஆசிரியர்கள் சகாதேவன்,கோபு,கதிரேசன், ராஜசேகர்,மற்றும் தேசிய காவேரிப்பட்டினம் சங்கத்தின் செயலாளர் பொருளாளர் "வடிவேல் "மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## பெரியகுளம் ஒன்றியபகுதிகளில் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது



பெரியகுளம், செப்டம்பர் 05 2021: தேனி மாவட்டம் பெரியகுளம் ஒன்றியபகுதிகளான வடபுதுப்பட்டி ,சருத்துப்பட்டி , ஜி கல்லுப்பட்டி ,எருமலைநாயக்கன்பட்டி ,குள்ளப்புரம் ,ஜெயமங்கலம் , தேவதானப்பட்டி ,சில்வார்பட்டி ,மேல்மங்கலம் ,வடுகபட்டி ,தாமரைக்குளம் , கீழவடகரை ,மையில்தாயம்மாள் திருமண மண்டபம் ,நாயுடு திருமண மண்டபம் , அரசு மருத்துவமனை ,அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி ,ஜெயராஜ் அன்னபாக்கியம் ,ஆகிய இடங்களில் பொதுமக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது . அனைவருக்கும் முகக்கவசம் ,கிருமி நாசினி ,சமூக இடைவெளி கடைபிடிக்கப்பட்டது .அந்தந்த பகுதிகளில் ஊராட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர் .சமூக பணியாளர்களும் சுகாதார பணியாளர்களும் அலுவலக பணியாளர்களும் கலந்து கொண்டனர் .அந்தந்த பகுதிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது.

## கடமலை மயிலை ஒன்றியத்தில் சமூக இடைவெளியின்றி தடுப்பூசி முகாம்



வருஷநாடு, செப்டம்பர் 05 2021: கடமலை மயிலை ஒன்றியத்தில் கடமலைக்குண்டு மேலப்பட்டி மு த்தாளம் பாறை தங்கம்மாள்புரம் வருஷநாடு ஆகிய ஊராட்சிகளில் 100 நாள் வேலை திட்ட பணியாளர்களும் வணிகர்களும் பொதுமக்களுக்கும் கட்டாயம் தடுப்பூசி செலுத்த வேண்டும். என்று தமிழக அரசு அறிவித்துள்ள நிலையில் அனைத்து ஊராட்சிகளிலும் நடைபெற்ற சிறப்பு முகாமில் டோக்கன் முறையில் தடுப்பூசி செலுத்தப்படுகிறது. பொதுமக்கள் ஆர்வத்துடன் இம்முகாமில் கலந்து கொண்டு தடுப்பூசி செலுத்தி கொண்டனர். ஆனால் முக கவசம் அணியாமலும் சமூக இடைவெளியை பின் பற்றாமலும் ஆர்வத்தில் மக்கள் கலந்து கொண்டதால் தொற்று ஏற்படும் அபாயம் உள்ளதாக சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர். மேலும் அனைத்து பொது மக்களுக்கும் தடுப்பூசி 100% தடுப்பூசி செலுத்தும் இலக்கை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்களும் சுகாதார ஆய்வாளர்கள் செவிலியர்களும் கூறுகின்றனர்.

## கோவை கிணத்துக்கடவு பகுதியில் சட்ட விரோதமாக இயங்கும் கல்குவாரி விவசாயிகள் பாதிப்பு



கோவை, செப்டம்பர் 05 2021: கோவை கிணத்துக்கடவு அருகிலுள்ள கோவிந்தநாயக்கனூர், வீரப்பகவுண்டனூர் பகுதியில் சட்ட விரோதமாக நடைபெறும் கல்குவாரியில் விவசாய நிலங்கள், நீர் நிலைகள் பாதிக்கப்படுவதாலும், வெடிவைத்து பாறைகளை தகர்க்கும்போது வீடுகளுக்கும், பொதுமக்களுக்கும் பாதிப்பு ஏற்படுவதாகவும் அதை விவசாயிகள் கேட்கச் சென்றபொழுது கல்குவாரி உரிமையாளர்கள் குண்டர்களை வைத்து மிரட்டுவதாகவும், விவசாயிகள் முற்றுகையிட்டனர். அங்கு சென்ற பாஜக விவசாய அணி மாநில தலைவர் ஜி.கே.நாகராஜ் காவல்துறை அதிகாரிகாளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். மாவட்ட உதவி ஆட்சியர் நேரில் வந்து இப்பிரச்சனை தீர்க்கப்படும் என்று காவல் துறை உறுதியளித்தனர். பின்னர் பொதுமக்கள் களைந்து சென்றனர்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



## நில அளவை துறையில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும் - தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றியம் அரசுக்கு கோரிக்கை



**மதுரை, செப்டம்பர் 05 2021: மதுரை மாவட்டம் பாண்டி கோவில் அருகே தனியார் மண்டபத்தில் தமிழ்நாடு நில அளவை அலுவலகம் ஒன்றியத்தின் மாவட்ட தலைவர்கள் மாவட்ட செயலாளர்கள்மாநில தலைவர் காயாம்பூ தலைமையில் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில் மாநில துணைத் தலைவர் சிவகுமார், மாவட்ட தலைவர் முத்து முனியாண்டி, மாவட்டச்செயலாளர் ராஜேந்திரன், மாவட்ட துணைத் தலைவர் ராஜ்குமார், மாவட்ட இணை செயலாளர் கவிதா, மாவட்ட பொருளாளர் ரகுபதி, உட்பட மதுரை விருதுநகர் திண்டுக்கல் உள்ளிட்ட தமிழகம் முழுவதிலும் இருந்து நில அளவை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.**

**இக்கூட்டத்தில் நில அளவை துறையில் உள்ள காலிப்பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பட்டா மாறுதல் சம்பந்தப்பட்ட வேலைகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் தமிழக அரசுக்கு முன்வைக்கப்பட்டது.**

## ஆண்டிபட்டி கடமலை மயிலையில் நெடுஞ்சாலைத்துறையினர் மூலம் மரக்கன்றுகள் நடப்பட்டன



**தேனி: தேனி மாவட்டம் ஆண்டிபட்டி வட்டம் கடமலை மயிலை ஒன்றியம் தங்கம்மாள்புரம் முதல் மூலக்கடை செல்லும் சாலையில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பாக சாலையோரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இதில் நெடுஞ்சாலைத் துறை ஆய்வாளர் முருகேசன் மற்றும் சாலைப்பணியாளர்கள் உதயம் அப்துல் கபூர் மரம் நடும் பணியில் ஈடுபட்டனர். இவரது செயல் அப்பகுதி மக்களின் பெரும் பாராட்டைப் பெற்றுள்ளது.**

## 100% இலக்கு அடைய அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்த வேண்டும்



**வருஷநாடு, செப்டம்பர் 05 2021: வருஷநாடு ஊராட்சியில் அரசு ஆரம்ப சுகாதார பள்ளியில் அரசு மருத்துவர் ஜக்கப்பன் தலைமையில் சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. சுகாதார ஆய்வாளர் மற்றும் செவிலியர்கள் மற்றும் பாதுகாப்பு பணியில் வருஷநாடு காவல்துறையினர் இப்பணியில் ஈடுபட்டனர். அனைவரும் ஆர்வத்துடன் தடுப்பூசி எடுத்துக் கொண்டனர். ஹலோ மிரர் மெட்ராஸ் ஆண்டிபட்டி தாலுகா செய்தியாளர் வருஷநாடு செந்தில்குமார் தடுப்பூசி போட்டு கொண்டபோது உடன் ஊராட்சி மன்ற தலைவர் மணிமுத்து, துணை தலைவர் பொன் கண்ணன், ஊராட்சி செயலர் முருகேசன், ஆகியோர் கலந்து கொண்டனர்.**



**மதுரை: மதுரை மாவட்டம் டாக்டர். எம். ஜி. ஆர் விளையாட்டு அரங்கத்தில் இருந்து நேரு யுவகேந்திரா சார்பில் 75வது சுதந்திர தின கொண்டாட்டத்தை முன்னிட்டு கல்லூரி மாணவ மாணவிகள் கலந்துகொண்ட ஆரோக்கிய இந்தியா விழிப்புணர்வு ஓட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அனிஷ்சேகர் துவக்கி வைத்தார்.**

## கிருஷ்ணகிரியில் பெய்து வரும் கனமழையால் வீடுகளை சூழ்ந்த கழிவு நீர் - கடும் துர்நாற்றம் வீசுவதுடன் நோய் தொற்று பரவும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் சாலை மறியல்



*கிருஷ்ணகிரி, செப்டம்பர் 05 2021:* கிருஷ்ணகிரி பழைய பேட்டை 12 ஆவது வார்டில் உள்ள நல்லதம்பி செட்டி தெரு பகுதியில் ஏராளமான குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இங்கு உள்ள கழிவு நீர் கால்வாய்கள் முறையாக இணைப்பு வழங்காததால் ஒவ்வொரு ஆண்டும் மழை காலங்களில் கழிவு நீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடும், மேலும் மழை அதிகமாக உள்ள நேரங்களில் மழை நீருடன் கழிவு நீர் கலந்து வீடுகளுக்குள்ளேயும் சென்று விடும், இதனால் கடும் துர் நாற்றம் வீசுவதுடன் பொதுமக்களுக்கு நோய் தொற்று பாதிப்பும் ஏற்பட்டு வருகிறது,

இந்த நிலையில் கடந்த இரு தினங்களாக பெய்த கன மழையால் மீண்டும் வீடுகளை சுற்றி கழிவு நீர் தேங்கியதுடன் கடும் துர்நாற்றம் வீச துவங்கியது, பல ஆண்டுகளாக இந்த பிரச்சினைக்கு தீர்வுகாண வலியுறுத்தி பொதுமக்கள் மனு அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்காத நிலையில் தற்பொழுதும் கழிவு நீர் சாலைகளில் தேங்கி உள்ளதால் ஆத்திரமடைந்த நல்லத்தம்பி தெரு வாசிகள் காங்கிரஸ் கட்சியின் ஊடகப்பிரிவு மாவட்டத்தலைவர் கமலகண்ணன் தலைமையில் சாலையில் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பழையபேட்டையில் இருந்து 5 ரோடு செல்லும் குப்பம் சாலையில் அமர்ந்து பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பொதுமக்கள் போராட்டம் குறித்து தகவல் அறிந்த நகர காவல்துறையினர் மற்றும் நகராட்சி துறையினர் பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி உடனடியாக கால்வாய்கள் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி அளித்தனர். இதனை அடுத்து பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர்.

## ராமேசுவரத்தில் அமாவாசை நாள் அன்று கோயில் நடை அடைப்பு அக்னி தீர்த்த கடலில் பக்தர்கள் நீராட தடை



*ராமேசுவரம், செப். 05 2021:* கரோனா நோய் பரவல் தடுப்பு நடவடிக்கை காரணமாக வெள்ளி,சனி,ஞாயிறு மற்றும் அமாவாசை நாளான திங்கட்கிழமை கோயில் நடை அடைப்பு அக்னி தீர்த்த கடலில் நீராட கோயில் நிர்வாகம் தடை விதித்துள்ளது,

இது குறித்து வெள்ளிக்கிழமை ராமநாதசுவாமி கோயில் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியதாவது:

